4. Blessed are those who mourn, for they will be comforted.
5. Blessed are the meek for they will inherit the earth.

6. Blessed are those who hunger and thirst for righteousness, for they will be filled.
7. Blessed are the merciful, for they will be shown mercy.
8. Blessed are the pure in heart, for they will see God.
9. Blessed are the peacemakers, for they will be called sons of God.
10. Blessed are those who are persecuted because of righteousness, for theirs is the kingdom of heaven.

I CORINTHIANS 13

1. If I speak in the tongues of men and of angels but have not love, I am only a resounding gong or a clanging cymbal.
2. If I have the gift of prophecy and can fathom all mysteries and all knowledge, and if I have a faith that can move mountains, but have not love I am nothing.
3. If I give all I possess to the poor and surrender my body to the flames but have not love. I gain nothing.
4. Love is patient, love is kind. It does not envy, it does not boast, it is not proud.
5. It is not rude, it is not self-seeking, it is not easily angered, it keeps no record of wrongs.
6. Love does not delight in evil but rejoices with the truth.
7. It always protects, always trusts, always hopes, always perseveres.
8. Love never fails. But where there are prophecies, they will cease; where there are tongues, they will be stilled; where there is knowledge, it will pass away.
9. For we know in part and we prophesy in part,
10. But when perfection comes, the imperfect disappears.
11. When I was a child, I talked like a child, I thought like a child I reasoned like a child. When I became a man I put childish ways behind me.
12. Now we see but a poor reflection as in a mirror then we shall

see face to face . Now I know in part; then I shall know fully, even as I am fully known.

13. And now these three remain; faith,hope and love.But the greatest of these is love.

PHILIPPIANS 4: 4-9

4. Rejoice in the Lord always. I will say it again Rejoice!
5. Let your gentleness be evident to all. The Lord is near.
6. Do not be anxious about anything, but in everything by prayer and petition, with thanksgiving, present your requests to God.
7. And the peace of God, which transcends all understanding, will guard your hearts and your minds in Christ Jesus.
8. Finally, brothers, whatever is true, whatever is noble whatever is right, whatever is pure, whatever is lovely, whatever is admirable-if anything is excellent or praise worthy-think about such things.
9. Whatever you have learned or received or heard from me or seen in me-put it into practice; And the God of peace will be with you.

PRAYERS

FIRST DAY LESSON

Psalm 145:9-15

Our Heavenly father,we thank you for all the blessings which you have showered upon us. We thank you for this new day. We give you thanks for our work and the health to do it. Help us to feel our responsibilities. Bless the students with the power of concentration. We pray in the name of our Lord and Saviour Jesus Christ. Amen.

SECOND DAY LESSON

Matthew 5: 1-12

O God, our father, you are good to all and your tender mercies are spread over all your works. Your works praise you, O Lord. They speak of the glory of your kingdom. Help us to understand your power and glory through our studies. Give us your wisdom and knowledge. Make us kind and considerate towards our fellowmen. Bless us and keep us all through today. We ask this through Jesus Christ our Lord. Amen.

THIRD DAY LESSON

Matthew 5: 13-16

Oh God, our creator, you have given us the gift of life to earn a living and to do our work. We thank you for the friends and their fellowship. Lord Jesus, you are the light of the world. Send out your light on us so that our work may shine and glorify you. Help us today to be cheerful and make others happy. Bless us this day as we go to work. We ask this through Jesus Christ our Lord. Amen.

FOURTH DAY LESSON

Psalm 23

Eternal and ever blessed God, we give you thanks for all the blessings which you have showered on us. We thank you for our institution, our work and for our studies. Kindly lead us in this path of righteousness. Help us to feel that you are with us always. Let your rod and staff comfort us. Give us grace to overcome evil. We pray in the mighty name of Jesus Christ. Amen.

FIFTH DAY LESSON

John 3: 14-17

Oh Lord our God, we give you thanks for the wonderful gift of your son Jesus Christ to this world. Through His life, death

and resurrection, our life on earth has become meaningful and easier. Help us to learn your love and follow it with our fellow men. Strengthen our friendship with your eternal love. We ask this in the name of Jesus Christ, our Lord. Amen.

SIXTH DAY LESSON

Psalm 121

Oh God, our Father, grant unto us all through this day patience with things and patience with people. Be with us through the hours of toil and leisure, joy and sorrow, failure and success, at all times and in all places. May our hearts turn towards you always for help and guidance, so that our life may be truly blessed, through Jesus Christ, our Lord. Amen

SEVENTH DAY LESSON

Psalm 43

Eternal God, grant unto us the grace and the power of your Holy Spirit fill every one of us with your love and help us to bear a witness for you on the earth. Grant unto us a thirst for knowledge and a desire to study. Help us to know more of the world you have created. Hear our prayer for the sake of Jesus Christ. our Lord, Amen.

EIGHTH DAY LESSON

Matthew 7: 16-20

Heavenly Father, we give you thanks for your goodness and for your steadfast love which endures us for ever. Make us diligent at work. Make us kind, considerate and courteous in our dealings with our fellowmen. Help us to remember in our every movement that you see us from above. Keep us away from all evil and help us to end this day peacefully with you. We ask this through Jesus Christ, our Lord.Amen.

NINTH DAY LESSON

Psalm 24 : 1 - 5

Our Father, you are in Heaven. Your will is being done in heaven. Use us as your instrument to fulfil your will on earth. Give us our daily bread. Forgive our sins and debts. Help us to forgive others as you did on this earth. If temptation comes on our way, help us to overcome it with your strength. For yours is the kingdom the power and the glory. We pray in Jesus's name, oh Lord. Amen.

TENTH DAY LESSON

Psalm 139:7-14

Almighty and Everlasting Father, you are the God of our strength. Deliver us from the deceitful and the unjust oppression of the enemies. Send out your light and your truth. Let them quieten the disquietened heart. Let them bring us to your holy hill and tabernacles with exceeding joy. Be on our lips so that we can speak only the truth. We pray in Jesus's name, oh Lord. Amen.

ELEVENTH DAY LESSON

Luke 15: 3-10

Our most merciful Father, we thank you for the gifts and graces of this new day. Give us grace to choose the right things and to refuse the wrongs. If we have to make decisions give us courage to overcome evil. Be on our hands so that we can do the work with diligence. As we go to work, we ask you to direct, to control and to guide us all through this day. We ask this through Jesus Christ, our Lord. Amen.

TWELFTH DAY LESSON

Psalm 19:7-17

Eternal God, we give thanks to you for all your mercies showered on us day after day. Help us to lift our eyes unto

the hills from where our help comes. Lord Jesus, you are our keeper. Preserve our souls from all evil. Enable us to be kind to those in need. Help us to be sympathetic towards the sick, the aged and the handicapped. Let our learnings reflect the love of our Master, Jesus Christ. This we ask for your love's sake. Amen.

THIRTEENTH DAY LESSON

Psalm 95 : 1 - 7

Oh God, our Father, maker of heaven and earth, We come to your presence with thanksgiving. We are the people of your pasture and the sheep of your hand. Kindly open your hand, O Lord and satisfy our desire. Be in our mind, so that no bitter thought can make an entry. Help us to be patient with those who are slow to learn and slow to understand. Help us not to lose our temper at any time. We pray in the matchless name of Jesus. Amen.

FOURTEENTH DAY LESSON

Psalm 119: 97-104

Oh, Gracious Lord, God of Mercy, your law is perfect and your commandments are wise. How sweet your words are, dear Lord, they are sweeter than honey. Help us to keep our way pure by guarding your word. Help us to add something new to our knowledge every day. Grant unto us to learn our faults and grow stronger in your faith and love. We ask in the precious name of our Lord Jesus Christ. Amen.

FIFTEENTH DAY LESSON

Romans 8 : 35 - 39

Oh God, our Father, we give you thanks for your everlasting love showered on every one of us and our activities. Father, you gave your only begotten son to the world so that we may have everlasting life. Help us to

realise our own mistakes and seek your strength to refrain from them. Save us from bitterness, jealousy and foolish discontent. Fill us with your eternal love and wash away our sins with your precious blood. We pray in the name of our Lord Jesus Christ. Amen.

SIXTEENTH DAY LESSON

Psalm 96 : 1 -6

Oh, Eternal God, we give thanks to your name for your steadfast love and your faithfulness. Though we walk in the midst of trouble, you stretch your hand against the wrath of our enemies and preserve our lives. Grant unto us today to grow closer to your likeness. Help us to learn much of self mastery and self control. In the end of this day, help us to feel that we are nearer to you, through Jesus Christ, our Lord. Amen.

SEVENTEENTH DAY LESSON

James 1:2-8

Almighty and everlasting Father we give you thanks for the new day and your new grace. You have said that if any one lacks wisdom, let him ask God who gives it to all men generously. Help us to ask in faith with no doubt. Sometimes we are double minded and unstable in our ways. Help us to remove our unsteadiness and strengthen us to stand on the rock of Israel. We pray in Jesus's name, oh Lord, Amen.

EIGHTEENTH DAY LESSON

Ephesians 6 : 11 -18

Oh, Lord, our Father, Creator of heaven and earth, your commandments are pure, perfect and enlightening to our hearts and souls. Moreover, your judgements are true and righteous. Let them guide us and guard us. Help us not to waver in our thoughts. Give us grace to accept your will and serve you with our whole heart. Help us to begin and end this day with you. We ask this through Jesus Christ, our Lord. Amen.

NINETEENTH DAY LESSON

Psalm 91 : 1 -10

Oh, Almighty and everlasting Father, we thank you for your steadfast love in the morning and your faithfulness in the night. You are our shelter, refuge and fortress. We put our trust in you and abide in your shadow. Keep us under your wings and deliver us from pestilence. Lord, we are going to begin our work. Give command to the angels to guard us in all our ways. We pray in the name of our Lord Jesus.Amen,

TWENTIETH DAY LESSON

Romans 1 : 7 -15

Heavenly Father, we praise you and glorify you for your mighty works. We are here to learn your wisdom and knowledge and to practise your love. Help us to remember your promise that the fear of the Lord is the beginning of wisdom. Save us from the temptations into which we would easily fall. Bless all with whom we move and work everyday. We ask in the precious name of our Lord and Saviour, Jesus Christ. Amen.

TWENTY FIRST DAY LESSON

Psalm 103: 1 -13

Eternal God, we thank you for your incomparable mercy which you pour on us everyday. We live only because of your grace and thank you for the same. Kindly forgive our iniquities and heal our diseases. Crown us with your steadfast love and mercy. Teach us to control our temper. Help us, not to put off our today's work for tomorrow. Help us not to waste time on wrong things and in idleness. This we ask for your love's sake. Amen.

TWENTY SECOND DAY LESSON

Romans 12: 10-16

O, God our Father, we thank you for the new day which fills us with your guidance, counsel and advice. Help us to be patient in

disappointments and teach us to continue in prayers constantly. Help us to honour each other with brotherly love. Grant unto us the sense of tolerance. Let your grace lead us to gain new virtues. We ask this in the name of our Lord, Jesus Christ. Amen.

TWENTY THIRD DAY LESSON

Philippians 4:4-8

Our most merciful Father, we thank you for creating us as we are and the world with day and night. Help us to submit to you everything through prayer and thanksgiving. Help us to meditate on the things which are true, honest, just and pure. Take away from us carelessness selfishness and disobedience. Help us to decide everything according to your will and end this day happily. We pray in the precious name of Jesus Christ. Amen.

TWENTY FOURTH DAY LESSON

Isaiah 1 :16-18

Heavenly Father, we thank you for all things that make this world a place of beauty. Equip us with the gifts of faith, hope and charity. Help us to be loyal to you only and protect us from all evil and easy ways of getting pleasures. Let your precious blood wash our sins of evil thoughts and deeds. Lord Jesus, make us pure, perfect and fill us with spiritual fruits. Use us as your vessels of soul winners. We pray in Jesus name, oh Lord. Amen.

TWENTY FIFTH DAY LESSON

Joshua 1:6-9

O God, our Father, we praise your mighty works and thank you for your blessings which you have showered on us so far. Help us to be strong and courageous and not to be afraid of anything. Help us to realise that you are with us always, wherever we go and whatever we do. Let your law and commandments be in our mouth and heart. Help us to be an example to the people around us and a witness to you. We pray in Jesus's name, oh Lord. Amen.

TWENTY SIXTH DAY LESSON

Matthew 7: 7-11

Our most merciful Lord, we praise you and worship you. Help us to sing new songs as David did. Lord Jesus, you have promised that when we ask, you will give. Enable us to ask only the things according to your will so that we can receive them immediately. Help us to open our hearts so that you can dwell in us permanently. Whenever any problem arises, help us to seek your help and guidance. Help us this day to work faithfully and work well. We pray in Jesus's name. Amen.

TWENTY SEVENTH DAY LESSON

I Thessalonians 5 : 15-23

Eternal and ever blessed Jesus, we thank you for the gift of this new day and its new grace . We thank you for this institution, the elders and youngsters whom you have given us. Help us to seek your guidance to do good to all. Help us to give thanks in all circumstances. Grant your eternal love and peace to everyone of us. Let all the people see in us the reflection of our Master. Bless us to be peace makers always. We pray in the name of our Lord Jesus Chirst. Amen.

TWENTY EIGHTH DAY LESSON

Luke 12:25-31

Our Heavenly Father, Creator of Heaven and Earth, we thank you for our work and for the health to do it. We thank you for the friends and comrades whom you have given us. Bless us this day as we go to work. Help us to realise our duties and responsibilities. Shape us to be loyal to you and mankind. If temptation comes to us, give us grace to overcome it. Enable us to be a help to those in difficulties. Lord Jesus, you have promised that you are with us always. Help us feel your presence all through this day. We pray all these in the name of our Lord and Saviour, Jesus Christ. Amen.

TWENTY NINTH DAY LESSON

John 10: 1-5

Almighty God and Everlasting Father, we thank you for the gift of this new day. We thank you for the skill of hand, mind and brain to learn for our living. Bless our students, staff, the principal and the institution. Lord Jesus you are our shepherd. We are your sheep. Help us to hear your voice and follow you. Give your wisdom and knowledge to every one of us, so that we can add something to our store of knowledge and to do our work better everyday. Lord Jesus, you are the light of the world. Help us to live and walk in your light. We ask these through Jesus Christ our Lord. Amen.

THIRTIETH DAY LESSON

John 15:1-15

O God, our Father, we know that everyday comes to us from you filled with new opportunities. We thank you for the new opportunities. Help us to utilise them wisely. Father, equip us with the gifts of yours. Grant unto us your faith, hope and purity. Above all, help us to remember, your second commandment, 'Love your neighbour as yourself' and teach us to practise it here. Arm our wills with your strength and fill our hearts with your everlasting love and peace, so that we can obey you and love our fellow men as you did. Be with us throughout this day and help us end this day happily and peacefully. We ask these in the precious name of Jesus Christ. Amen.

THIRTY FIRST DAY LESSON

Matthew 5 : 42 - 45

Our Loving Heavenly Father we thank you for all your loving kindness and mercies showered on us. We thank you for the books that we read and the lessons that we learn every day . Today we specially pray for the drug addicts, terrorists and extremists in our country. Lord allow the Holy Spirit to

cleanse them and make them new vessels for the glory of Jesus Christ. Help us not to forget the poor, the sick and the downtrodden. We ask all these in the name of our Lord Jesus Christ. Amen.

கர்த்தருடைய இராப்போஜனம் ஆகிய பரிசுத்த நற்கருணை ஆயத்தம்

ஒரு கீதம் அல்லது ஒரு சங்கீதம் பாடலாம் அல்லது சொல்லலாம். பணிவிடைக்காரர் கர்த்தருடைய மேசையண்டை வரும்போது சபையார் நிற்க வேண்டும். ஆராதனையில் உபயோகிக்கப்படும் வேதாகமத்தைக் குருவாகிலும் அவருடன் இருப்பவரில் ஒருவராகிலும் தன் இரு கைகளிலும் கொண்டு வந்து திருமேஜையிலாவது வாசிப்புப் பீடத்திலாவது வைக்க வேண்டும். குரு ஜனங்கள் முகமாய்த் திருமேஜைக்குப் பின் நிற்கலாம்.

சபையார் நின்று கொண்டிருக்க குரு சொல்வது:

பிரார்த்தனை செய்வோமாக

எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம் பண்ணியருள எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

பின் எல்லாரும் சேர்ந்து பாட அல்லது சொல்ல வேண்டியது:

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே, பரமராஜாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறோம்; உம்மைப் புகழுகிறோம்; உம்மை வணங்குகிறோம்; உம்மை மகிமைப்படுத்துகிறோம்; உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு தோத்திரம் செலுத்துகிறோம்.

கர்த்தராயிருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்கள் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும். தேவனாகிய பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவரே எங்களுக்கு இரங்கும்.

நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர், இயேசுகிறிஸ்துவே தேவரீர்

ஒருவரே பரிசுத்த ஆவியோடே, தேவனாகிய பிதாவின் மகிமையிலே, உன்னதமானவராயிருக்கிறீர். ஆமென்.

அல்லது பின்வரும் புராதனப் பாட்டை மூன்றுதரம் பாடலாம் அல்லது சொல்லலாம்.

பரிசுத்த தேவனே.
பரிசுத்தமும் வல்லமையுமானவரே.
பரிசுத்தமும் நித்தியமுமானவரே.
எங்களுக்கு இரங்கும்

நாட்டை இராகம் — ஏகதாளம்

பரிசுத்த தேவனே நித்தியமானவா
பரிபூரணனே வல்லமை நிறைந்தவா
பரிவுடன் இரங்குவீர் பரனே சரணம் (3 தடவை)

அல்லது குரு பின்வரும் லித்தானியா ஜெபத்தைச் சொல்ல உதவிகுரு மறுமொழியை முன்சொல்ல சபையார் சேர்ந்து சொல்வார்கள்.

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பலத்தையும், கனத்தையும், மகிமையையும், தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்.

ஆட்டுக்குட்டியானவருக்கு மகிமையுண்டாவதாக.

சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும், தோத்திரமும், கனமும், மகிமையும், அதிகாரமும், சதாகாலங்களிலும் உண்டாவதாக.

ஆட்டுக்குட்டியானவருக்கு மகிமையுண்டாவதாக.

தேவரீர் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில்,நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர்.

ஆட்டுக்குட்டியானவருக்கு மகிமை உண்டாவதாக.

இரட்சிப்பின் மகிமை, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக. எங்கள் தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், தோத்திரமும், கனமும், வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொன்னதாவது:

நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழுஇருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும்,

உன் முழு மனதோடும், உன் முழு பெலத்தோடும், அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்பதே.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக்
கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நாத நாமக்கிரியை இராகம் — ஆதிதாளம்

கர்த்தாவே எங்களுக்கு இரங்கி
கருத்துடன் இந்தப்பிரமாணத்தைக்
கைக்கொள்ள இதயத்தை ஏவியருளும்

* அல்லது

பத்துக்கற்பனைகள்

தேவன் திருவுளம் பற்றிச்சொல்லிய வார்த்தைகளாவன:உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப்பிரமாணத்தைக்
கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப்பிரமாணத்தைக்
கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக்
கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக.ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக்
கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

கொலை செய்யாதிருப்பாயாக.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

களவு செய்யாதிருப்பாயாக.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

இச்சியாதிருப்பாயாக.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

பின் குரு சொல்வது:

பிரியமானவர்களே, நாம் இப்பொழுது தேவனுடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும், ஆண்டவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும், பெற்றுக் கொள்ளவும் இங்கே கூடி வந்திருக்கிறோம். உத்தம மனஸ்தாபத்தோடும், விசுவாசத்தோடும் அவரிடத்தில் கிட்டிச் சேருவதற்காக தேவனுடைய கிருபையைத் தேடி முழங்காற்படியிட்டு, மௌனமாக நம்மை நாமே சோதித்து அறிவோமாக.

எல்லோரும் முழங்கால்படியிட்டு சற்றுநேரம் அமைதியாயிருக்கவும்.

குரு சொல்வது:

உங்கள் பாவங்களினிமித்தம் முழு இருதயத்தோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து, இனி தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, புதிதாக்கப்பட்டவர்களாய் அவருடைய பரிசுத்த மார்க்கத்தில் நடப்போம் என்று தீர்மானித்திருக்கிற நீங்கள், நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் சர்வ வல்லமையுள்ள கடவுளோடு ஒப்புரவாகும்படி உங்கள் பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடுங்கள்.

மக்கள் முன் சொல்ல எல்லோரும் சேர்ந்து சொல்வது:

பரமபிதாவே, உமக்கு விரோதமாகவும் எங்கள் அயலாருக்கு விரோதமாகவும், பாவஞ்செய்தோமென்று அறிக்கையிடுகிறோம். ஒளியில் நடவாமல் இருளில் நடந்து வந்தோம். கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லியும் தீமையை விட்டு விலகவில்லை; எங்களுக்கு இரங்க வேண்டுமென்று உம்மிடம் மன்றாடுகிறோம். இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னியும். உமது பரிசுத்த ஆவியினால் எங்களைச் சுத்திகரித்து எங்கள் மனச்சாட்சியை உயிர்ப்பித்தருளும். உம்முடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாகும்படி நாங்கள் இனிப் புது ஜீவனுள்ளவர்களாய் உமக்கு ஊழியம் செய்யத்தக்கதாக மற்றவர்களுக்கு மன்னிக்க எங்களுக்கு உதவி புரியும். ஆமென்.

குரு எழுந்து நின்று சொல்வது:

அல்லது வேறு வசனங்களை குரு உபயோகிக்கலாம்

இயேசுகிறிஸ்துவின் மூலமாகத் தம்மிடத்தில் உண்மையாய் மனந்திரும்புகிற யாவருக்கும் அருளப்படுகிற கிருபை நிறைந்த தேவ வசனங்களைக் கேளுங்கள்.

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்,நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை, உண்மையும், எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது.

ஒருவன் பாவஞ்செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து, நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே.

சற்று நேரம் அமைதியாய் இருந்தபின் குரு சொல்வது:

நம்முடைய பரம பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள கடவுள், உத்தம மனஸ்தாபத்தோடும், உண்மையான விசுவாசத்தோடும், தம்மிடத்திற்கு மனந்திரும்பி, தங்கள் சகோதரர் சகோதரிகளின் குற்றங்களை மன்னிக்கிற யாவருக்கும் பாவமன்னிப்பை அருளிச்செய்வோம் என்று மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் உங்களுக்கு இரங்கி, உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து அவைகளினின்று உங்களை விடுதலையாக்கி, சகல நன்மையிலும் உங்களை உறுதிப்படுத்தி, நிலைநிறுத்தி, உங்களை நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக.

ஆமென் தேவரீருக்கே தோத்திரமுண்டாவதாக.

சங்கராபரண இராகம் ஏகதாளம்

ஆமென் தேவரீருக்கே தோத்திரமுண்டாவதாக.

தேவ வசனப் போதனை

கர்த்தர் உங்களோடிருப்பாராக
அவர் உமது ஆவியோடுமிருப்பாராக.

சாரங்கா இராகம் ஏகதாளம்

குரு : கர்த்தர் உங்களோடிருப்பாராக

மறுமொழி : கர்த்தருமதாவியோடுமிருப்பாராக.

ஜெபம் பண்ணக்கடவோம்.

அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபம் அல்லது வேறொரு சுருக்க ஜெபம்

வேதாகமம் வாசிக்கப்படும்போது எல்லாப் பாடங்களுக்கும், அல்லது சுவிசேஷ வாக்கியத்துக்காவது எழுந்து நிற்கவும்.

பழைய ஏற்பாட்டுப் பாடம் வாசிக்கப்படும்.

.....ஆகமம்...அதிகாரம்....வசனமுதல் அடங்கிய தேவனுடைய வார்த்தையைக் கேளுங்கள்.

பாடமுடிவில் **இது ஆண்டவரின் திருவார்த்தை** என்று சொல்லவும்.

தேவனே உமக்குத் தோத்திரமுண்டாவதாக

வசந்தா இராகம் ஏகதாளம்

தோத்திரம் உண்டாவதாக - தேவரீருக்கே
தோத்திரம் உண்டாவதாக.

சங்கீதம் அல்லது கீதம் இங்கே பாடலாம்.

நிருப வாக்கியம் வாசிக்கப்படும்.

பாட முடிவில் **இது ஆண்டவரின் திருவார்த்தை** என்று சொல்லவும்.

தேவனே உமக்குத் தோத்திரமுண்டாவதாக.

வசந்தா இராகம் ஏகதாளம்

தோத்திரம் உண்டாவதாக - தேவரீருக்கே
தோத்திரம் உண்டாவதாக.

சுவிசேஷ வாக்கியம் வாசிக்கப்படும்.

......நற்செய்தி நூல்......அதிகாரம்.....வசனமுதல் அடங்கிய தேவனுடைய வார்த்தையைக் கேளுங்கள்.

பாட முடிவில் **இது கிறிஸ்துவின் நற்செய்தி** என்று சொல்லவும்.

கிறிஸ்துவே உமக்கு மகிமை உண்டாவதாக

வசந்தா இராகம் ஏகதாளம்

மகிமையே உண்டாவதாக - கிறிஸ்துவுக்கே
மகிமையே உண்டாவதாக.

பின் சபையார் உட்கார்ந்திருக்கப் பிரசங்கம் செய்ய வேண்டும்.

பின் எல்லோரும் எழுந்து நின்று நிசேயா விசுவாசப் பிரமாணத்தைச் சொல்ல அல்லது பாட வேண்டும்.

வானத்தையும், பூமியையும், காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்.

ஒரே கர்த்தருமாய் தேவனுடைய ஒரே பேறான குமாரனுமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்;தெய்வத்தில் தெய்வமானவர்; ஜோதியில் ஜோதியானவர்; மெய்தேவனில் மெய் தேவனானவர்; உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர்; பிதாவோடே ஒரே தன்மையுடையவர்; சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கிப் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் அவதரித்து மனிதனானார். நமக்காக பொந்தியுபிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையுண்டு பாடுபட்டு அடக்கம் பண்ணப்பட்டார். வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பரமண்டலத்துக்கேறி பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். உயிருள்ளோரையும், மரித்தோரையும், நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.

கர்த்தருமாய் ஜீவனைக் கொடுக்கிறவருமாய் பிதாவிலும், குமாரனிலும், நின்று புறப்படுகிறவருமாய் பிதாவோடும் குமாரனோடும் கூடத்தொழுது தோத்திரிக்கப்படுகிறவருமாய் தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பரிசுத்த பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவ மன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை

அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும் மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமென்.

விளம்பரங்கள் அறிவிக்கப்பட்டு காணிக்கை சேகரிக்கப்படலாம். அது பரிசுத்தப் பொருட்களுடன் பின்னால் படைக்கப்படும் ஒரு கீதமும் பாடலாம்.சமயத்துக்கேற்ற விண்ணப்பங்களைச் செய்ய குரு சபையாரை அழைக்கலாம்.

பின்வரும் லித்தானியாவை மக்கள் நடத்துவார். அது சொல்ல அல்லது பாடப்படலாம்.

அல்லது

திருச்சபைக்காகவும் உலகத்துக்காகவும் குரு தமது சொந்த வார்த்தைகளில் மன்றாட்டு ஏறெடுக்கலாம்.

ஜெபம் பண்ணக்கடவோம்

எல்லா மனிதருக்காகவும், ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் செய்து ஸ்தோத்திரங்களைச் செலுத்த வேண்டுமென்று கற்பித்தருளின சர்வ வல்லமையுள்ள தேவனே எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

எங்குமுள்ள திருச்சபைக்குத் தேவரீர் உண்மையும் ஐக்கியமும் ஏக சிந்தையுமுள்ள மனதை இடைவிடாமல் அருளிச் செய்யும்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

கரகரப்பிரியா

ஆதிதாளம்

எங்கள் ஜெபத்தை ஏறெடுக்கிறோம்
ஏற்றுக்கொள்ளும் கர்த்தாவே

(எல்லா விண்ணப்பங்களுக்கும் பின் பாடவும்)

உம்முடைய திருநாமத்தை அறிக்கையிடுகிற யாவரும் உமது பரிசுத்த வசனத்தின் சத்தியத்தைக் குறித்து இசைந்த மனதுள்ளவர்களாயிருந்து, தைரியத்தோடும் உண்மையோடும் அதற்கு சாட்சி பகர அனுக்கிரகஞ் செய்யும்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

சகல தேசத்தாரையும் நீதியின் பாதையிலும் சமாதான வழியிலும் நடத்தியருளும்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

நாங்களும் மற்றெல்லா மனிதரும், தேவ பக்தியோடும், சாந்தத்தோடும் ஆளப்படும்படி மனிதருடைய விஷயங்களில் அதிகாரம் வகிப்பவர்களையும், விசேஷமாய் இந்தியக் குடியரசின் ஜனாதிபதியாகிய....ஐயும் எங்களை ஆளுகிறவர்களையும், உமது பரிசுத்தமும் சமாதானமுமான ஞானத்தால் நடத்தியருளும்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

எல்லா பேராயர்களும், குருக்களும், உதவிகுருக்களும் விசேஷமாக..... என்னும் எங்கள் பிரதம பேராயரும்.................. என்னும் எங்கள் பேராயரும் தங்கள் நடக்கையினாலும், போதகத்தினாலும், சத்தியமும், ஜீவனுமுள்ள உமது வசனத்தைப் பிரசித்தப்படுத்தி, உமது பரிசுத்த சாக்கிரமெந்துகளை ஒழுங்காயும், செம்மையாயும் கொடுக்க அவர்கள் அனைவருக்கும் உமது கிருபையை அருளிச் செய்யும்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

சகல தேசத்தாருக்குள்ளும், உமது சுவிசேஷம் பரவும்படி உழைத்துவரும் யாவரையும் வழி நடத்தி ஆசீர்வதித்து, எல்லா கல்வி நிறுவனங்களையும் பள்ளிகளையும் வைத்திய சாலைகளையும் உமது ஆவியானவரால் பிரகாசிப்பித்தருளும்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

உமது பரம ஆதரவினாலே நாங்கள் பஞ்சத்தினின்றும் வறுமையினின்றும் காக்கப்பட்டு, பூமியின் நற்பலன்களை அதனதன் காலத்தில் நன்றியறிதலான இருதயத்தோடு அனுபவிக்கும்படி எங்களுக்குக் கிருபை செய்தருளும்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

உம்முடைய ஜனங்கள் எல்லாரும் விசேஷமாய் இவ்விடத்தில் கூடி வந்திருக்கிற இந்தச் சபையாரும், சாந்த இருதயத்தோடும், தகுந்த வணக்கத்தோடும் உமது பரிசுத்த வசனத்தைக் கேட்டு உட்கொண்டு, தங்கள் வாழ்நாளெல்லாம் பரிசுத்தமும், நீதியுமுள்ளவர்களாய் உமக்கு உத்தம ஊழியம் செய்ய அவர்களுக்கு, உமது பரம கிருபையைக் கொடுத்தருளும்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

நிலையில்லாத இந்த ஜீவ காலத்தில் துன்பம், துக்கம், வறுமை, வியாதி முதலான உபத்திரவங்களால் வருத்தப்படுகிற யாவரையும், உமது தயவினாலே தேற்றி ஆதரித்தருளும்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

உம்மிடத்தில் விசுவாசமும் பயபக்தியுமுள்ளவர்களாய் ஜீவித்துப்போன உமது அடியார் எல்லாருக்காகவும் நாங்கள் உம்மைத் துதித்து அவர்களோடு கூட நாங்களும் உமது பரம ராஜ்யத்தில் பங்குபெறும்படி அவர்கள் காட்டிய நல்மாதிரியைப் பின்பற்ற எங்களுக்குக் கிருபை செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும் கர்த்தாவே

இரண்டாவது லித்தானியா

பரத்திலிருந்து வரும் சமாதானத்திற்காகவும், நம்முடைய ஆத்துமாக்களின்

இரட்சிப்புக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

கர்த்தாவே கிருபையாயிரும்

மோகனராகம்

ஏகதாளம்

அகிலலோக சமாதானத்திற்காகவும்,கடவுளுடைய பரிசுத்த சபைகளின் நல் வாழ்வுக்காகவும், அவைகளின் ஒருமைப்பாட்டுக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

கர்த்தாவே கிருபையாயிரும்

நம்முடைய பேராயர்களும்,மற்றெல்லா பணிவிடைக்காரர்களும் விசேஷமாய்....என்னும் நமது பிரதம பேராயரும்.............. என்னும் நமது பேராயரும், நல்ல இருதயத்தோடும், சுத்த மனச்சாட்சியோடும், தாங்கள் பணிவிடையை நிறைவேற்ற கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

கர்த்தாவே கிருபையாயிரும்

நமது தேசத்தின் அதிபதிகளுக்காகவும், அதிகாரம் வகிப்பவர் எல்லாருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

கர்த்தாவே கிருபையாயிரும்

வியாதியஸ்தர், உபத்திரவப்படுவோர், துக்கப்படுவோர், மரணத்தருவாயிலிருப்போர் அனைவருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

கர்த்தாவே கிருபையாயிரும்

ஏழைகள், பட்டினியாயிருப்போர், அனாதைகள், விதவைகள், அனைவருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

கர்த்தாவே கிருபையாயிரும்

அந்தகாரத்தினின்று நம்மை தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய மகத்துவங்களைக் காண்பிக்கும் பொருட்டாக, நமக்காகவும், கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கைபண்ணும் யாவருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

கர்த்தாவே கிருபையாயிரும்

இவ்வுலகத்தில் அவரைச் சேவித்து இப்போது ஓய்வு பெற்றிருக்கும் அவரது அடியார் அனைவரோடுங்கூட நாம் அவரது முடிவற்ற மகிழ்ச்சியின் நிறைவில் பங்குபெற கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

கர்த்தாவே கிருபையாயிரும்

லித்தானியாவிற்குப் பின் குருசொல்வது

ஜெபம் பண்ணக்கடவோம்

சர்வ வல்லமையுள்ள தேவனே, சகல ஞானத்திற்கும் காரணரே நாங்கள் வேண்டிக்கொள்வதற்கு முன் எங்கள் அவசியங்கள் உமக்குத் தெரியும்.

நாங்கள் அறியாமல் கேட்கிறோம் என்பதும் உமக்குத் தெரியும். தேவரீர் எங்கள் பலவீனங்களைப் பார்த்து இரங்கி, நாங்கள் எங்கள் அபாத்திரத்தினிமித்தம் துணிந்து கேட்கக்கூடாதவைகளையும், எங்கள் குருட்டாட்டத்தினிமித்தம் கேட்கத் தெரியாதவைகளையும், உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் எங்களுக்கு அநுக்கிரகித்தருளும். ஆமென்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட எப்பொழுதும் இருப்பதாக. ஆமென்.

ஆராதனை முடியுமுன் வெளியேறுபவர்கள் இவ்வேளையில் வெளியேறவும்.

அப்பம் பிட்குதல்

எல்லோரும் எழுந்து நிற்க குரு சொல்வது:

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எவ்வளவு நன்மையும் எவ்வளவு இன்பமுமானது.

அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.

நான் அவருடைய கூடாரத்திலே ஆனந்த பலிகளையிட்டு கர்த்தரைப்பாடி அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

சுத்த சாவேரி இராகம் — ஆதிதாளம்

ஆண்டவரின் கூடாரத்தில் ஆனந்த பலியிட்டு
ஆவலாய்க் கீர்த்தனம் பாடிடுவோம்.

சமாதானம் இங்கே கொடுக்கலாம்.

ஒரு கீதம் பாடப்படும் அப்போது சபையாருடைய காணிக்கைகளும், பரிசுத்த திருவிருந்துக்கு வேண்டிய அப்பமும் திராட்சரசமும் முன்னால் கொண்டு வரப்பட்டு திருமேஜையில் வைக்கப்படும். கொண்டு வருபவர்கள் பின்வரும் ஜெபம் சொல்லப்படுகையில் திருமேஜையின் முன் நிற்பார்கள்.

எல்லோரும் இன்னும் நின்றுகொண்டிருக்க குரு சொல்வது:

பரிசுத்த பிதாவே, உமது கிருபாசனத்தண்டையில் பிரவேசிப்பதற்கு புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உமது அருமையான குமாரனின் இரத்தத்தினால் எங்களுக்கு உண்டுபண்ணினீரே. நாங்கள் அபாத்திரராயிருந்தும் அவர் மூலமாக உம்மண்டை வருகிறோம். எங்களையும் இந்தக் காணிக்கைகளையும், உம்முடைய நாம மகிமைக்காக அங்கீகரித்து உபயோகிக்கும்படியாகத் தாழ்மையோடு வேண்டிக்கொள்கிறோம். வானத்திலும், பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள். உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுக்கிறோம்.ஆமென்.

காணிக்கைகளைக் கொண்டு வந்தவர்கள் இப்பொழுது தங்கள் இடங்களுக்குத் திரும்புவார்கள்.

குரு: ஜெபம் பண்ணக்கடவோம்

குருவும் ஜனங்களும் முழங்காற்படியிட்டுச் சேர்ந்து சொல்வது.

இயேசுவே, உத்தமப் பிரதான ஆசாரியரே, நீர் உமது சீஷர்கள் மத்தியில் பிரசன்னமாயிருந்தது போலவே எங்கள் மத்தியில் பிரசன்னமாகி அப்பத்தைப் பிட்கையில் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தியருளும். நீரே பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் சதாகாலமும் ஒரே தேவனாக ஜீவித்து அரசாளுகிறீர். ஆமென்.

மோகன இராகம்

ரூபகதாளம்

பிரதான குருநாதா பிரசன்னம் அருள்வீரே
பிரிய சீடர் நடுவிலே பிரசன்னமானவரே
பிதாவோடும் ஆவியோடும் பிணைந்தொரே தேவனாய்
பிசகாதே அரசாளும் பெருந்தகையே அப்பமதைப்
பிட்கையிலே வெளிப்படுத்தும் ஆமென்.

குரு இப்போது எழுந்து நிற்பார்

கர்த்தர் உங்களோடு இருப்பாராக

அவர் உமது ஆவியோடும் இருப்பாராக

உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்

எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்

நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு தோத்திரம் செலுத்தக்கடவோம்

அப்படி செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

சாரங்கா இராகம்

ஏகதாளம்

குரு : கர்த்தர் உங்களோடிருப்பாராக.

மறுமொழி : கர்த்தருமதாவியோடும் இருப்பாராக

குரு : உங்கள் இருதயத்தை உயர்த்திடுங்கள்

மறுமொழி : உயர்த்துவோம் இதயத்தைக் கர்த்தரிடமே

குரு : தோத்திரம் செலுத்துவோம் தேவனுக்கே

மறுமொழி : தகுதியும் நீதியும் அதுவேயாகும்.

கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் உமக்குத் தோத்திரம் செலுத்துகிறது தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

* உமது குமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நீர் வானங்களையும் பூமியையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்தீர். மனுக்குலத்தை உமது சாயலாக உண்டாக்கினீர். நாங்கள் பாவத்தில் விழுந்தபோது புது சிருஷ்டியின் முதற்பலனாக நீர் எங்களை மீட்டுக்கொண்டீர்.

ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடும் பரம சபை அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி சேனைகளின் கர்த்தராகிய தேவனே நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன. உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மைத் தோத்தரிக்கின்றோம். ஆமென்.

கர்த்தரின் நாமத்தினாலே வந்தவரும் வருகிறவருமானவர் தோத்தரிக்கப்பட்டவர். உன்னதத்திலே ஓசன்னா

காம்போதி இராகம் ஆதிதாளம்

தோத்திரிக்கின்றோம் தூயா நின் நாமம்
தூதர் குழாத்தோடும் துதித்துப் புகழ்ந்து
துதி மிகுந்தேறிட மேன்மைப்படுத்தி
தூய சேனைகளின் கர்த்தராம் தேவரீர்
தூயவர் தூயவர் தூயவரெனவே
துதி மிகுந்தேறிட மேன்மைப்படுத்தித் தோத்திரிக்கின்றோம்
நின் மகிமையினால் நிறைந்தன விண்மண்
நித்திய மகிமை நிமலனே உமக்கே
துத்தியம் செய்து மகிமைப்படுத்தித்
தூய சேனைகளின் கர்த்தராம் தேவரீர்
தூயவர் தூயவர் தூயவரெனவே
துத்தியும் செய்து மகிமைப்படுத்தி தோத்திரிக்கின்றோம்

சங்கராபரண இராகம் திஸ்ர ஏகதாளம்

கர்த்தரின் நாமத்தில் வந்தவராம்
கருணையாய் இங்கு வருபவராம்
உத்தமர் தோத்திரம் ஏற்பவராம்
உன்னதத்திலென்றும் ஓசன்னா

ஆம் பிதாவே, நீர் பரிசுத்தர். நீர் தோத்திரிக்கப்பட்டவர். தேவரீர் மனிதரில் உருக்கமாய் அன்புகூர்ந்து, உமது ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து எங்கள் தன்மையைத் தரித்துக் கொள்ளவும் சிலுவையில் மரித்து எங்களை மீட்டுக்கொள்ளவும் அவரைத் தந்தருளினீரே; அவர்

சிலுவையில் ஒரே தரம் தம்மைத் தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்கு நிறைவும், பரிபூரணமும், போந்ததுமான பலியையும், காணிக்கையையும், பரிகாரத்தையும் செலுத்தினதுமல்லாமல், தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்பவருமளவும், நாங்கள் அதை அனுசரித்து வரும்படி, தமது பரிசுத்த சுவிசேஷத்தில் கட்டளையிட்டருளினாரே; அவர் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே, அப்பத்தை எடுத்து * தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம்; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

அப்படியே போஜனம் பண்ணினபின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து தோத்திரம்பண்ணி அவர்களுக்கு கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவ மன்னிப்பு உண்டாகும்படி உங்களுக்காகவும், அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம்; இதைப் பானம் பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார். ஆமென்.

கர்த்தாவே, உமது மரணத்தை நினைவுகூருகிறோம்; உமது உயிர்த்தெழுதலை அறிக்கையிடுகிறோம். நீர் திரும்பி வரக்காத்திருக்கிறோம். கிறிஸ்துவே உமக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

ஹிந்தோள இராகம் ஆதிதாளம்

கர்த்தா உம்மரணத்தை நினைவு கூர்ந்து
களிப்புடன் உயிர்த்ததை அறிக்கை செய்து
காத்திருப்போம் உம் வருகைக்காக
காசினியில் உம்மைத் தோத்திரிப்போம்

ஆதலால் பிதாவே, உமது குமாரனாகிய எங்கள் ஆண்டவரின் அருமையான பாடுகளையும், மரணத்தையும், மகிமையான உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் நினைவுகூர்ந்து, உமது அடியார்களாகிய நாங்கள் அவருடைய கட்டளையின்படியே அவர் வருகையை எதிர்நோக்கினவர்களாக இதைச்செய்கிறோம். அவரில் நீர் எங்களுக்காக நிறைவேற்றின பூரண மீட்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

கர்த்தாவே, எங்கள் தேவனே உம்மைத்துதிக்கிறோம். உம்மைப் புகழுகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம்.

நவரோஜ் இராகம் ஆதிதாளம்

கர்த்தாவே எங்கள் தேவனே
கருத்துடன் உம்மைத் துதிக்கின்றோம்

காருண்யரே உம்மைப் புகழுகின்றோம்
கனிவுடன் மகிமைப்படுத்துகின்றோம்

இரக்கமுள்ள பிதாவே, நாங்கள் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயும், நாங்கள் ஆசீர்வதிக்கிற பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கும்படி எங்களையும் நீரே தந்த இந்த அப்பத்தையும் திராட்சரசத்தையும் உமது பரிசுத்த ஆவியினால் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று மிகுந்த தாழ்மையோடு பிரார்த்திக்கிறோம். நாங்கள் எல்லாரும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவில் கூட்டி இணைக்கப்பட்டவர்களாகி, விசுவாசத்தில் ஒருமைப்படவும், தலையாகிய அவருக்குள் எல்லாவற்றிலேயும் வளரவும் கிருபை செய்யும். அவரோடும் பரிசுத்த ஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய உமக்கு அவர் மூலமாய் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமென்.

குரு முழங்காற்படியிடலாம்

நமது இரட்சகராகிய கிறிஸ்து கற்பித்தபடி அவரில் நமக்கு அருளப்பட்ட தைரியத்தோடே சொல்வோமாக.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

எல்லாரும் முழங்காலில் சற்று நேரம் அமைதியாய் இருக்கவும்.

இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல் தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச்சேருகிறோம். உம்முடைய மேஜையின் கீழ் விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல. ஆனாலும் தேவரீர் எப்பொழுதும் இரக்கஞ்செய்கிற இலட்சணமுடைய மாறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் விலைமதியாத சரீரத்தாலும், இரத்தத்தாலும், எங்கள் பாவமுள்ள சரீரமும், ஆத்துமாவும் சுத்தமாகி எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும் அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கு ஏற்றவிதமாய், அவருடைய

சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ண எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

குரு எழுந்து நின்று அப்பத்தைப் பிட்டுச் சொல்வது

நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா?

அல்லது

தேவனுடையவைகள் தேவனுடையவர்களுக்கே

அல்லது

அவர் மெதுவாக அப்பத்தைப் பிட்கலாம். பணிவிடைக்காரரும் சபையாரும் இப்போது நற்கருணை பெறுவார்கள். நற்கருணை கொடுக்கும்போது சொல்ல வேண்டிய வார்த்தைகளாவன:

ஜீவ அப்பமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரம்.

மெய்யான திராட்சையாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம்.

* அல்லது

வேறு வார்த்தைகளை உபயோகிக்கலாம்.

இச்சமயத்தில் கீழ்க்கண்ட கீதம் சொல்ல அல்லது பாடலாம்.

லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.
லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.
லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, உமது சமாதானத்தைத் தாரும்.

மல்கஹரி இராகம் — ரூபகதாளம்

ஜெகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தேவாட்டுக்குட்டியே எங்களுக்குக்கிரங்கும்
தேவா சமாதானம் தாரும்
தேவாட்டுக்குட்டியே எங்களுக்குக்கிரங்கும்
தேவா சமாதானம் தாரும்

அல்லது வேறு ஒரு கீதம் பாடலாம்.

எல்லாரும் பங்கு பெற்றபின் சபையார் முழங்காலில் நிற்க குரு சொல்வது:

கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தை விசுவாசத்தினால் பெற்றுக்கொண்டவர்களாகிய நாம், அவருக்கு தோத்திரம் செலுத்துவோமாக.

இந்த ஜெபத்தை குருவானவர் தனியாகவோ அல்லது எல்லோரும் சேர்ந்தோ சொல்லலாம் அல்லது சொந்த வார்த்தைகளில் ஜெபம் ஏறெடுக்கலாம்.

சர்வ வல்லமையுள்ள கடவுளே, பரம பிதாவே, உமது நேசகுமாரனும், எங்கள் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவுக்குள், எங்களை உமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, அவருடைய விலைமதியாத திருச்சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தால் எங்களைப் போஷித்திருக்கிறீர். எங்கள் பாவங்களை மன்னித்து, நித்திய ஜீவனை எங்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறீர் அளவிடப்படாத இந்த நன்மைகளுக்காக உம்மைத் தோத்திரிக்கின்றோம். சரீரமும், ஆத்துமாவுமாகிய எங்களைப் பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.இதுவே நாங்கள் செய்யத்தக்க ஆத்மீக ஆராதனை. நாங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவரீருடைய நன்மையும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக எங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகும்படி எங்களுக்கு அருள்புரியும். கடைசியில் நாங்கள் உமது பரிசுத்தவான்கள் அனைவரோடும் உமது நித்திய இராஜ்ஜியத்தின் ஆனந்தத்தை அடையத்தக்கதாக, இவ்வுலகத்தில் உமக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்கு கிருபை செய்யும். உம்மோடும் பரிசுத்தாவியோடும் ஒரே தேவனாய் சதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இவைகளை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

எங்கள் தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், தோத்திரமும், கனமும் வல்லமையும், பெலமும், சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

சுத்த சாவேரி இராகம் திரிபுடை தாளம்

ஜெயமும் மகிமையும் சேர்துதி கனமும்
செப்பரும் ஞானமும் பெலமும் வல்லமையும்
தேவரீர்க்கென்றும் உண்டாவதாக. ஆமென்.

அல்லது

ஆமென் எங்கள் தேவனுக்கு துதி மகிமை ஞானமுடன்
தேமதுர தோத்திரமும் கனம் மகிமை புகழோடு
தாமிருக்கும் காலமெல்லாம் நித்தியமும் உண்டாக
ஆமென் என துதியெடுப்போம்
அன்பர் குழாமொடு சேர்ந்து

பின் குரு கடைசி ஆசீர்வாதம் கூறுவார்

எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும், அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும், அன்பிலும் நிலைத்திருக்கும்படி உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக் கடவது. பிதா குமாரன், பரிசுத்த ஆவியுமாகிய சர்வ வல்லமை பொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக் கடவது. -ஆமென்.

EMERGENCY PHONE NUMBERS

When in sorrow	call John 14
When men fail you	call Psalm 27
When you have sinned	call Psalm 51
When you worry	call Matthew 6:19-34
When you are in danger	call Psalm 91
When God seems far away	call Psalm 139
When your faith needs stirring	call Hebrews 11
When you are lonely and fearful	call Psalm 23
When you grow bitter and critical	call I Corinthians 13
When you feel down and out	call Romans 8:31
When you want peace and rest	call Matthew 11:25-30
When the world seems bigger than God	call Psalm 90
When you want Christian assurance	call Romans 8:1-30
When you leave home for labour or travel	call Psalm 121
When your prayers grow narrow or selfish	call Psalm 67
When you want courage for a task	call Joshua 1
When you think of investments and returns	call Mark 10
If you are depressed	call Psalm 27
If your Pocketbook is empty	call Psalm 37
If you are losing confidence in people	call I Corinthians 13
If people seem unkind	call John 15

If discouraged about your work	call Psalm 126
If self pride/greatness takes hold	call Psalm 19
If you want to be fruitful	call John 15
For understanding of Christianity	call II Corinthians 5:15-19
For a great invention/opportunity	call Isaiah '55
For how to get along with fellow men	call Romans 12
For Paul's secret to happiness	call Colossians 3:12-17

ALTERNATE NUMBERS:

For dealing with fear	**call Psalm 34:7**
For security	**call Psalm 121:3**
For assurance	**call Mark 8:35**
For reassurance	**call Psalm 145:18**

PLEASE NOTE:

Emergency numbers may be dialled direct. No operator assistance is necessary. All lines to Heaven are open 24 hours a day! Feed your FAITH, and DOUBT will starve to death!

கல்லூரிக் கீதங்கள்...

நாசரேத் மர்காஷிஸ் கல்லூரி
பிள்ளையன்மனை

GPR Offset, Palai. Cell : 944345327